# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | ஆண்டவரின் திருமுழுக்கு | 12 ஜனவரி 2025


**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

திருஅவை - இரக்கத்துடன் இருக்க அழைப்பு

# சமூகங்களின் பன்முகத்தன்மையைக் கொண்டாடுதல்

இந்தக் காலக்கட்டங்களில் நம்முடைய பல பங்குகளில் தமிழ் பேசும் சமூகத்தினர் நன்றி தெரிவிக்கும் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். கலாச்சார நடைமுறைகளின் ஒருங்கிணைப்பு என்பது நாம் பல்வேறு பின்னனி, இனத்தைச் சேர்ந்த கடவுளின் மக்கள் என்பதை உறுதிப்படுத்துவதாகும்.



திருவழிபாட்டு நாட்காட்டியின்படி இன்று நாம் ஆண்டவரின் திருமுழுக்கைக் கொண்டாடுகிறோம். இயேசு தம்முடைய திருமுழுக்கைப் பெற்றுக்கொண்டது, துன்புறும் ஊழியனாக தம்முடையப் பணியை அவர் ஏற்றுக்கொண்டதன் அடையாளம் என்று கத்தோலிக்க மறைபோதகம் நமக்குக் கற்பிக்கிறது. பாவிகளோடு அவரையும் எண்ணிக்கொள்ள அவரை அனுமதிக்கிறார் (கமபோ 536)

புனித லூக்கா ஒரு அழுத்தமான கதையை விவரித்து, தந்தையின் இதயத்தோடு நம்மையும் இணைக்கிறார். எசாயா இறைவாக்குரைத்தபடி, கடவுள், இயேசுவை தம்முடைய அன்பான மகன் என்றும் அவரில் அவர் மகிழ்ச்சியடைகிறார் என்றும் கூறுகிறார். மேலும் இயேசு திருமுழுக்குப் பெற்று இறைவேண்டல் செய்யும்போது, வானம் திறந்து, தூய ஆவியார் அவர் மீது இறங்கியது என்று நற்செய்தியில் வாசிக்கின்றோம்.

தந்தையின் இந்த உறுதிமொழி, இயேசுவை பலப்படுத்துகிறது, மேலும் அவரின் பணிக்கு அவரை அழைக்கிறது. அவரின் வாழ்க்கையைச் சுற்றிலும் இருள் சூழ்ந்திருந்தாலும், பொதுப் பணியில் அவர் தம்மை இனைத்துக்கொள்கிறார். நற்செய்தி வாழ்த்தொலியில் மேலும் ஒரு படிநிலை, இயேசுவின் குரலுக்குக் கீழ்ப்படியுமாறு தந்தை நமக்குக் கூறுகிறார். கடவுள் தம் மகனை மாட்சிப்படுத்தி வெளிப்படுத்துகிறார். இயேசு - கடவுள், நம்மோடு இருக்கிறார். திருமுழுக்கின் காட்சிக்கு சாட்சிகளாக நின்றவர்கள் தந்தை கடவுளின் குரலுக்கு மறுமொழி அளிக்க அழைக்கப்படுகிறார்கள். இது நம்முடைய திருமுழுக்கையும் நினைவூட்டுகிறது.

நாம் திருமுழுக்குப் பெறும்போது, சிலுவையில் கிறிஸ்து அனுபவிக்கும் அதே பலனை நாமும் அனுபவிக்கும் பொருட்டு நம்மைத் தம்மோடு இணைத்துக்கொள்ளும் கிறிஸ்துவோடு ஒன்றிக்கப்படுகிறோம். சிலுவை என்பது அன்பு மற்றும் மன்னிப்பின் அடையாளமாகும். இது திருமுழுக்கின் வழியாக நாம் பெற்றுக்கொள்ளும் சிறப்புரிமை.

நம்முடைய மறுமொழி என்னவாக இருக்கவேண்டும்? கடவுள் நமக்குக் கட்டளையிட்டபடி நாம் இயேசுவுக்கு செவிமடுக்கின்றோமா? இயேசு தம்முடைய திருமுழுக்கிற்குப்பின் இறைவேண்டல் செய்தார். இறைவேண்டல் அவரின் தந்தையோடு அவரை இணைக்கின்றது. இறைவேண்டல் விண்ணகத்தை திறக்கின்றது, மேலும் கடவுள் தம் மக்களை அமைதியில் ஆசீர்வதிக்கிறார். இந்த ஜூபிலி ஆண்டில் எதிர்நோக்கின் திருப்பயணிகளாக இருக்கும் நாம் கடவுள் தந்த ஒவ்வொரு நொடியிலும் இறைவேண்டல் செய்யவும், கடவுளுக்கு செவிமடுக்கவும், நம் உள்ளத்தின் ஆழத்தை மாற்றும்படி தூய ஆவியாரை நம்முள் அனுமதிக்கவும் செய்வோம்., ஒப்புரவு செய்யும் ஒவ்வொருமுறையும் கிறிஸ்துவை சந்திக்கும் நாம் ஒருபோதும் சோர்வடைய மாட்டோம்., ஏனென்றால் தந்தையாகிய கடவுள் எப்போதும் அன்பானவராகவும், மன்னிப்பவராகவும் இருக்கிறார் என்பதை அறிந்துள்ளோம்.

பின்னர் கடவுளின் அருட்பொழிவினால், திருஅவை இரக்கமுள்ளவராக இருக்க அழைக்கப்படுவதால், நன்மை செய்வதன்மூலம், அசுத்த ஆவிகளால் ஒடுக்கப்பட்டவர்கள் குணமடைந்து இயேசுவைப் பின்செல்ல முடியும். ஏனென்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார். ✣

இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை; ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்.

(கலாத்தியர் 3:28)

**இன்றைய இறைவார்த்தை:**

எசாயா 40: 1-5, 9-11

திருப்பாடல்: 104: 1-4, 24-25, 27-30

தீத்து 2: 11-14, 3:4-7

லூக்கா 3: 15-16, 21-22


INTERNAL CIRCULATION ONLY
BUL 02/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org